


கருத்தரங்கை தொடங்கி வைத்து கவர்னர் முகுத்மிதி பேசிய போது எடுத்த படம். அருகில் பேராயர் டாக்டர் அந்தோணி ஆனந்தராயர், புதுச்சேரி பல நோக்கு சேவா சங்க நிர்வாக இயக்குனர் ரட்சகர் அடிகள் உள்பட பலர் உள்ளனர்.

### புதுச்சேரியில்

# பேரிடர் மேலாண்மை குறித்த ஆலோசனை கருத்தரங்கு

## கவர்னர் முகுத்மிதி தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, பிப்.22- புதுச்சேரியில் பேரிடர் மேலாண்மை குறித்த ஆலோசனை கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கை கவர்னர் முகுத்மிதி தொடங்கி வைத்தார்.

### கருத்தரங்கு

புதுச்சேரி பலநோக்கு சமூக சேவா சங்கம், சுனாமியால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி-கடலூர் மற்றும் காரைக்கால் பகுதியில் 20 கிராமங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளில் கடந்த 2 வருடங்களாக சேவை செய்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கடலோர பகுதியில் உள்ள மீனவர்களுக்கு பேரிடர் காலங்களில் அவர்களை தற்காத்துக் கொள்வதற்காக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தகவல்களை பரிமாறி கொள்வது பற்றி தொழில்நுட்ப வல்லுனர்களுடன் கலந்தாய்வு கருத்தரங்கு புதுச்சேரி பல நோக்கு சமூக சேவா சங்கத்தின் கூட்ட அரங்கில் நேற்று காலை நடைபெற்றது.

### கவர்னர் முகுத்மிதி

இந்த கருத்தரங்கிற்கு புதுச்சேரி-கடலூர் உயர்மறைமாவட்ட பேராயர் டாக்டர் அந்தோணி ஆனந்தராயர் முன்னிலை வகித்தார். புதுச்சேரி பல நோக்கு சமூக சேவா சங்க நிர்வாக இயக்குனர் ரட்சகர் அடிகள் வரவேற்றார். கவர்னர் முகுத்மிதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:-

உள்ளூர் மக்களை ஒருங்கிணைத்து பேரிடர் மேலாண்மைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். கடந்த 20 ஆண்டுகளில் தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சி அடைந்து உள்ளது.

### வளரும் நாடுகள்

இந்த தொழில்நுட்ப வளர்ச்சியில் பேரிடர் மேலாண்மையை பயன்படுத்த வேண்டும். பல்வேறு வளர்ந்த நாடுகளில், தொழில் நுட்பம் வளர்ந்து இருந்தும் பேரிடர் மேலாண்மையை பயன்படுத்துவது கிடையாது. மனிதகுல நலனுக்காக பேரிடர் மேலாண்மையை நவீன தொழில்நுட்பத்தில் பயன்படுத்த வேண்டும்.

சுனாமி வந்த போது ஆப்பிரிக்கா கடலோர பகுதியில் சுமார் 7 மணி நேரம் கழித்து தான் சுனாமி தாக்குதல் நடைபெற்றது. இந்த இடைவெளியில் நல்ல திருப்பம் ஏற்பட்டுள்ளது. இதை பேரிடர் மேலாண்மை மூலம் நன்றாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். இதில் உடமைகளை பாதுகாக்க முடியாவிட்டாலும், நிறைய உயிர்களை பாதுகாக்கலாம்.

இவ்வாறு கவர்னர் முகுத்மிதி பேசினார்.

### கலந்து கொண்டவர்கள்

இந்நிகழ்ச்சியில் கடல் அலை உயரம், கடலில் மீன்கிடைக்கும் இடங்கள் பற்றிய தகவல்களை ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசிய பெருங்கடல் ஆராய்ச்சி தகவல் சேவை மையமும், சென்னை இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அன்றாட தட்பவெப்ப நிலவரங்களையும் புதுச்சேரி மல்டிபர்பஸ் சோசியல் சர்வீஸ் சொசைட்டி மூலமாக புதுச்சேரி-கடலூர், காரைக்கால் பகுதியில் வாழும் கடலோர மீனவ மக்களுக்கு பேரிடர் மேலாண்மையை மக்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது.

இதில் இந்திய கடலோர பாதுகாப்பு படை, கடலூர் தீயணைப்பு துறை, புதுச்சேரி பி.எஸ்.என்.எல் உள்பட பல நிறுவனங்களின் அதிகாரிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை புதுச்சேரி பல நோக்கு சேவா சங்க பணியாளர்கள் செய்து இருந்தனர்.